

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.03.2024) ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறையில், மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் கணேச மூர்த்தியின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அமைச்சர்கள் முத்துசாமி, வெள்ளகோவில் சாமிநாதன், திருமதி கயல்விழி செல்வராஜ், ஈரோடு மக்களவைத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் பிரகாஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



திருநெல்வேலி மக்களவைத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ்க்கு ஆதரவாக கை சின்னத்தில் வாக்கு கேட்டு நெல்லை மாவட்டம் இராதாபுரம் தொகுதி கூத்தங்குழி மீனவர்கள் வாழும் பகுதியில் மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் உரையாற்றினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, ஒன்றியச் செயலாளர்கள் ஜெகதீஸ், ஜோசப்பெல்சி, ஆரோக்கிய எட்வின் உள்பட பலர் உள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயணம்!



**01.04.2024 ( திங்கட்கிழமை )**

**திருநெல்வேலி**

| நேரம் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| மாலை 4.00 | இராதாபுரம் (திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்) | பெருந்தலைவர் காமராஜர் சிலை அருகில், வள்ளியூர் |

**கன்னியாகுமரி**

| நேரம் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| மாலை 4.30 | கன்னியாகுமரி | குழித்துறை அண்ணா சிலை |
| மாலை 5.30 | | புதுக்கடை பேருந்து நிலையம் |
| மாலை 6.15 | | குளச்சல் பீச் முக்கு |
| மாலை 7.00 | | நாகர்கோவில் வடசேரி அண்ணா சிலை |
| மாலை 7.45 | | கொட்டாரம் ஜங்ஷன் |

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பீட்டர் அல்போன்ஸ் - விஜிலா சத்யானந்த் - டாக்டர் சுபேர்கான் தேர்தல் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, பீட்டர் அல்போன்ஸ் - திருமதி விஜிலா சத்யானந்த் - டாக்டர் சுபேர்கான் ஆகியோர் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பின்வரும் நாடாளுமன்றத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 04.04.2024 | - | கன்னியாகுமரி |
| 05.04.2024 | - | தூத்துக்குடி |
| 06.04.2024 | - | இராமநாதபுரம் |
| 07.04.2024 | - | பெரம்பலூர் |
| 08.04.2024 | - | திண்டுக்கல் |
| 09.04.2024 | - | கோயம்புத்தூர் |
| 10.04.2024 | - | நீலகிரி |
| 11.04.2024 | - | வேலூர் |
| 12.04.2024 | - | திருபெரும்புதூர் |
| 13.04.2024 | - | சென்னை |

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதிமோகன் தேர்தல் பிரச்சாரம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதிமோகன் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 04.04.2024 | - | கோயம்புத்தூர் |
| 05.04.2024 | - | ஈரோடு |
| 06.04.2024 | - | சேலம் |
| 07.04.2024 | - | கள்ளக்குறிச்சி |
| 08.04.2024 | - | விழுப்புரம் |
| 09.04.2024 | - | பெரம்பலூர் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 31.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஏப்ரல் 01 2024



**துணிவுமிக்க உள்ளம்! பணிவுமிக்க பண்பாடு! கொள்கையில் உறுதி! குறிகோளுக்காக தியாகம் செய்யும் இயல்பு!!**

தி.மு.க.மாநில தொண்டரணி செயலாளர்

தமிழ்ப்போராளி

## த.மாசிலாமணி எம்.ஏ.,

தங்கள் நினைவுகளுடன்

மனைவி : ரமா.மாசிலாமணி மகன் : மா.தமிழ்ச்செல்வன் BE.,
மகள் : மா.கண்மணி BE., மருமகன் : ச.இளவரசன் BE.,
மற்றும் கழகத்தோழர்கள்

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.

# இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் கே.சம்பத்ராஜா அறிவிப்பு!

இராமநாதபுரம், ஏப். 1 –

இராமநாதபுரம் மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள், தி.மு.க. இளைஞர் அணி நகர, ஒன்றிய, பேரூர் பொறுப்புகளுக்கு விருப்பமனு அளித்தவர்கள் மற்றும் இளைஞரணி பாக முகவர்கள் கூட்டம் இன்று (1.4.2024 – திங்கட்கிழமை) மதியம் 1.30 மணிக்கு இராமநாதபுரம், பாரதி நகர் பீமாஸ் வைஸ்ராய் ஹாலில் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமையில் கழக இளைஞரணி துணைச் செயலாளர்கள் ஜி.பி.ராஜா, இன்பா ஏ.என்.ரகு மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ரமேஸ் கண்ணா, சி.கே.குமரகுரு, சண் சம்பத் குமார், ஆர்.எஸ்.சத்தியேந்திரன், ஆர்.கே.கோபிநாத், எஸ்.தௌபீக் ரஹ்மான் முன்னிலையில் நடைபெறுகிறது.

ஆகவே இராமநாதபுரம் மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள், இளைஞர் அணி நகர, ஒன்றிய, பேரூர் பொறுப்புகளுக்கு விருப்பமனு அளித்தவர்கள் மற்றும் இளைஞரணி பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு இளைஞரணி அமைப்பாளர் கே.சம்பத்ராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

# புதுக்கோட்டையில் வாக்குச் சேகரிப்பு!

புதுக்கோட்டை. ஏப். 1 –

தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில், புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில், ''இந்தியா'' கூட்டணியில் இடம்பெற்றுள்ள தோழமைக் கட்சி நிர்வாகிகள் முன்னிலையில், திருச்சி நாடாளுமன்றத் தொகுதி ம.தி.மு.க.வேட்பாளர், சகோதரர் துரை வைகோவிற்கு தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கப்பட்டுள்ள தீப்பெட்டி சின்னத்தை அறிமுகப்படுத்தும் எழுச்சிமிகு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், ஆ.செந்தில், ம.தி.மு.க. எஸ்.கே.கலியமூர்த்தி, கம்யூனிஸ்ட் கவிவர்மன், கம்யூனிஸ்ட் செங்கோடன், பி.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, சு.சண்முகம். என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், மா.மணிவேல், கவிஞர் ஆ. மரிய எட்வின், கவிவேந்தன், கண்மணி சுப்பு, பழனிவேலு, புதுநகர் குமார், எம்.கே.அறிவுடை நம்பி, சி,மாரியப்பன், ஏ.எல்.கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சாத்தூர் பாலகிருஷ்ணன்
ஏப்ரல் 1 (1976)



சுயமரியாதை இயக்கச் சுடர் சாத்தூர் நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

துவக்க காலம் தொட்டு இயக்கம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

மிசா காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டு காவல் துறையினரின் அடக்குமுறைக்கு ஆளாகி உயிர் நீத்தவர்.

"சாத்தூர் பாலகிருஷ்ணன் – அய்யோ! எவ்வளவு உயரமான உருவம்! எத்துணை கம்பீரத் தோற்றம்! எவ்வளவு இனிய இயல்பு! அடக்கம்! அமைதி! அன்பின் பெருக்கு! எல்லாமே பொதிந்திருந்த ஆருயிர் உடன்பிறப்பு!" என தலைவர் கலைஞர் தம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**